# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

**செய்தி மடல்**
**06.08.2022**

**கோவிட்-19 சம்பந்தமான அறிவுறுத்தல்கள் :**

- ✓ பாடசாலை வளாகத்தினுள் உள்நுழையும் –
  - ☑ 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இரண்டு கோவிட் தடுப்பூசி பெற்றிருத்தல் நன்று.
  - ☑ மருத்துவர் பரிந்துரைக்கும் அனைவரும் எப்போதும் முகக்கவசம் அணிந்திருத்தல் நன்று.
- ✓ பாடசாலை வாயிலில் கூட்டம் கூடுவதை தவிர்த்து சமூக இடைவெளி அறிவுறுத்தல்களை பின்பற்றவும்.
- ✓ நீங்கள் சுகவீனமுற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் பாடசாலை வருவதை தவிர்த்துக்கொள்ளவும். கோவிட் தொற்று அறிகுறியாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் மாநில மற்றும் மத்திய அரசின் கோவிட்-19 அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

**“தமிழ் – அகத்தியன் கண்ட அமுதமொழி. அமிழ்தினும் இனிய மொழி.**
**உலகத்தின் முதல் மொழி. தரணி போற்றும் நம் மொழி.**
**கடவுளே இறங்கிவந்து சங்கம் அமைத்து வளர்த்த**
**மொழி எம் தாய் மொழி”.** இச்சிறப்புடைய நாம் தமிழர்களாக தலைநிமிர்ந்து வாழ எம் சிறார்களுக்கு தமிழைக் கற்பிக்கும் தலையாய கடமையை செவ்வனே செய்யும் மவுண்ட் றூயிட் தமிழ் கல்வி நிலையம் தமிழை மட்டுமன்றி மாணவர்களை பண்பு, ஒழுக்கம், பணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை கொண்ட சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருவதுடன் அவர்களை ஒரு பொறுப்பு வாய்ந்த மாணவ சமூதாயமாகவும் உருவாக்கிவருகின்றது என்றால் மிகையாகாது. அது மட்டுமன்றி தற்பொழுது மாணவர்களை HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இச்சிறப்பு பெற்ற எமது கல்வி நிலையத்தில் தமிழ் கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

### 1. *பாடசாலை விபரம்*

| | |
|---|---|
| வகுப்புகள் / **Classes :** | முன்பள்ளி முதல் ஆண்டு 12 HSC தமிழ் வரை / **Preschool to HSC** |
| நடைபெறும் இடம் / **Centre Location :** | **Colyton Public School**, 43 - 81 Nelson Street, Mount Druitt, NSW 2770 |
| மின்னஞ்சல் / **Email :** | mtdruitttsc@gmail.com |
| இணையத்தளம் /**Website :** | www.mtsc.org.au |
| முகப்புத்தகம் / **Facebook :** | https://www.facebook.com/groups/374995486577634/ |
| கைப்பேசி / **Mobile Phone :** | 0449 892 066 |

### 2. *2022ம் ஆண்டு பாடசாலையின் முக்கிய திகதிகள்*

| | |
|---|---|
| மூன்றாம் தவணை : | 23.07.2022 முதல் 24.09.2022 வரை * |
| கலைவிழா : | 24.09.2022 * |
| நான்காம் தவணை : | 15.10.2022 முதல் 17.12.2022 வரை * |
| சரஸ்வதி பூஜை (வாணி விழா) : | 15.10.2022 * |

* அனைத்து திகதிகளும் கோவிட்-19 சூழ்நிலைக்கேற்ப மாற்றத்துக்குரியது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**பாடசாலை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு :**

### 3. *கலை விழா 2022 (24.09.2022 சனிக்கிழமை மாலை 4.30 மணி முதல்)*

**எமது பாடசாலையின் வருடாந்த கலை விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 24ம் திகதி (24.09.2022) சனிக்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு Plumpton High School (141 Hyatts Road, PLUMPTON NSW 2761) நடைபெறும்.** எனவே எமது அனைத்து மாணவர்களும் மாலை 4.15 மணிக்கு முன்னதாக சமூகமளித்து அனைத்து மாணவர்களும் பங்குபற்றும் முதல்நிகழ்ச்சி சிறப்புற நடைபெற ஒத்துழைப்பை வழங்கும் வண்ணம் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். தவிர்க்கமுடியாத காரணத்தால் உரிய நேரத்திற்கு சமூகமளிக்க முடியாதவிடத்தில் உடனடியாக தங்களது வகுப்பு ஆசிரியரை தொடர்பு கொண்டு உங்களது நிகழ்ச்சி சிறப்புற நடைபெற ஒத்துழைப்பை வழங்குவதுடன் நீங்கள் அனைவரும் பாடசாலை வாகன தரிப்பிடத்தையும் பயன்படுத்தலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**கலை விழாக் கட்டணம் – $50.00**

பாடசாலையின் கலை விழாவுக்கான மண்டபக் கட்டணம் மற்றும் இதர செலவுகளுக்காக பெற்றோர்களிடமிருந்து இவ்வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு $50ஐ எமது கல்வி நிலைய பொருளாளர் திரு.சி.தேசிங்கு அவர்களிடம் செலுத்தி ஒத்துழைக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். கட்டணத்தை செலுத்த நீங்கள் கீழ்வரும் பாடசாலை வங்கிக்கணக்கையும் பயன்படுத்தலாம் என்பதுடன் தவறாது மாணவர் பெயர், வகுப்பு விபரத்தையும் அதில் பதிவிடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

(Name: **Mount Druitt Tamil Study Centre**
Account Number with BSB: **112 879 043215976**
(Please leave transfer note with your kids name and class as reference.)

கலை விழா அன்று உங்களுக்கு தேவையான இரவு உணவை நீங்கள் முன்கூட்டியே பாடசாலை நிர்வாகத்திடம் உரிய பணத்தை செலுத்தி உங்களுக்கான உணவு குறியை (*token*) பெற்றுக்கொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் **கலை விழாவிற்கான ஒத்திகை முதல் நாள் வெள்ளிக்கிழமை (23.09.2022) மாலை 6.00 மணிக்கு Plumpton High School (141 Hyatts Road, PLUMPTON NSW 2761) பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.** கலை விழா ஒத்திகையன்று பாடசாலை நிர்வாகம் அனைவருக்கும் இரவு உணவு வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இதற்கு தேவையான இரவு உணவுகளை வழங்க விரும்பும் பெற்றோர்கள் 17.09.2022 திகதிக்கு முன்னர் எமது உப செயலாளர் திரு. க. சுதாகரன் அவர்களைத் தொடர்புகொண்டு அவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

4. *பெற்றோர் கலந்துரையாடல்*

எதிர்வரும் **27.08.2022 சனிக்கிழமை அன்று பி.ப. 2.15 மணிக்கு** நடைபெற இருக்கும் பாடசாலை கலைவிழா பற்றிய முக்கிய கலந்துரையாடலுக்கு சகல பெற்றோர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

5. *பேச்சுப் போட்டி - 2022*

புகைப்படங்களைப் பார்வையிட இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

எமது பாடசாலையின் வருடாந்த பேச்சுப்போட்டி இவ்வருடமும் எமது பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் அனைத்து வகுப்பு மாணவர்களும் பங்குபற்றியதுடன் நடுவர்களின் பராட்டுக்களையும் அவர்கள் பெற்றது மிகவும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும். இப்பேச்சுப் போட்டியில் மாணவர்கள் திறமையாக மேடையில் பேசுவதற்கு உதவிய ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு எமது பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கினறோம்.

6. *அமைச்சர் விருது — 2022* **(Minister Award)**

இந்த வருடம் எமது பாடசாலையில் இருந்து அமைச்சர் விருது பெறுவதற்கு எமது கல்விக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட கீழ்குறிப்பிடப்பட்ட இரு மாணவர்களும் 2022 ஆண்டிற்கான விருதினை பெற்றுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| **ரிஷின் றோஷாந் ரூபன்** | மேற்பிரிவு | – மாணவர் சாதனைக்கான பாராட்டு விருது |
| **நிரோஷிகா சுதாகரன்** | கீழ்பிரிவு | – மாணவர் சாதனைக்கான பாராட்டு விருது |

இந்த இரண்டு மாணவர்களையும் மவுண்ட்றூயிட் தமிழ்க் கல்வி நிலையம் தனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

7. *அமைச்சர் விருது பெற்ற மாணவர்களுக்கு நினைவுக் கேடயம் வழங்கல்*

இந்த வருடம் எமது பாடசாலையில் இருந்து 2022 ஆண்டிற்கான அமைச்சர் விருதினைப் பெற்ற **ரிஷின் றோஷாந் ரூபன், நிரோஷிகா சுதாகரன்** ஆகிய இரு மாணவர்களுக்கும் அமைச்சர் விருதிற்கான நினைவு கேடயம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் எமது கலை விழாவில் நடைபெறவுள்ளது.

8. *நீண்ட கால ஆசிரிய சேவையை பூர்த்தி செய்த ஆசிரியர்களைக் கௌரவித்தல்*

எமது பாடசாலையில் அடுத்த தலைமுறைகளுக்கு எமது தமிழை கற்பித்து மொழியையும் பண்பாட்டையும் இந்த நாட்டில் நிலைநிறுத்த பாடுபடும் ஆசிரிய சேவையில் நீண்ட கால ஆசிரிய சேவையை நிறைவு செய்த ஆசிரியர் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் எமது கலை விழாவில் இடம்பெறவுள்ளது.

9. *பாடசாலை நேரம் - பி.ப. 2:00 மணி முதல் பி.ப. 5:00 மணிவரை (மூன்றாம் தவணை மட்டும்)*

பிள்ளைகளை பாடசாலைக்கு பி.ப. 1.55 மணிக்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும் போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.30ல் இருந்து பி.ப. 3.45 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 5.00 மணி |

### *10. பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்*

உங்கள் பிள்ளைகளுக்கான இந்த வருடத்திற்கான பாடசாலை கட்டணத்தை இதுவரை செலுத்தாதவர்கள் தவணை மூன்று முடியும் முன் செலுத்தி பாடசாலை திறம்பட நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம். எமது பாடசாலை Creative Kids Registered Provider ஆக அங்கீகாரம் பெற்றுள்ளதால் நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். எனவே பெற்றோர் கொடுப்பனவை நீங்கள் பணமாக அல்லது Creative Kids Voucher மூலம் செலுத்தலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்வி நிலைய பொருளாளர் திரு. சிவகுமார் தேசிங்கு (தொலைபேசி இல: 0401 955 912) அல்லது உப பொருளாளர் திரு. தங்கவேல் மயூரதன் (தொலைபேசி இல : 0421 571 201) அவர்களை தொடர்பு கொள்ளவும்.

### *11. பாடசாலை அறிவித்தல்கள்*

அவ்வப்போது பாடசாலை சம்பந்தப்பட்ட அறிவித்தல்கள் செய்திமடல் (Newsletter), மின்அஞ்சல் (email), இணையத்தளம் (Website), முகப்புத்தகம் (Facebook), பெற்றோர் கலந்துரையாடல் (Parent's Meeting) மற்றும் மாணவர் வகுப்பு வாட்ஸ்அப் குழு (Class WhatsApp Group) மூலம் அறிவிக்கப்படும். எனவே ஒவ்வொரு பெற்றோரும் தங்களது சரியான மின்னஞ்சல் முகவரியை பாடசாலை தரவுத்தளத்தில் (School Database) பேணுவதுடன் தங்கள் பிள்ளைகளின் வகுப்பு வாட்ஸ்அப் குழுவில் இணைந்திருப்பதையும் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### *12. ஆசிரியர் மற்றும் அதிபர் விருதுகள்*

மாணவர்கள் வகுப்பில் தமது திறமைகளை வெளிப்படுத்துதல், ஒழுக்கமாக இருத்தல், ஆசிரியர் கற்பிப்பதை கவனமாக செவிமடுத்தல், மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருத்தல் போன்றவற்றிற்காக ஆசிரியரினால் மாணவர்களுக்கு ஆசிரியர் விருது வகுப்பில் வழங்கப்படும். ஐந்து ஆசிரியர் விருதுகள் பெற்ற மாணவர்கள் ஒரு அதிபர் விருதுக்கு தகமையுடையவர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு பாடசாலை ஒன்றுகூடலின் போது அதிபரால், அதிபர் விருது வழங்கப்படும்.

### *13. பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்தல் மற்றும் மாணவர் வரவு*

பாடசாலையில் சேர உங்கள் குழந்தையின் வயது குறைந்தது $3^1/_2$ வயதைவிடக் கூடியதாக இருக்க வேண்டும். மாணவர்களை வருட ஆரம்பத்தில் பாடசாலையில் சேர்ப்பது பெரிதும் வரவேற்கப்படுகின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் மாணவர்கள் நம் பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களை இலகுவாக ஆரம்பத்திலிருந்தே கற்கக்கூடியதாகவும் சக மாணவர்களுடன் நன்கு அறிமுகம் செய்து கொள்ள ஏதுவாகவும் இருக்கும். இது பாடசாலையை இடையூறின்றி சிறப்பாக நடாத்த உதவுவதுடன் தங்கள் பிள்ளை சார்பான அரச மானியத்தையும் பாடசாலை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன் பாடசாலையில் நடைபெறும் பல்வேறு போட்டிகளில் பரிசில்களைத் தீர்மானிப்பதற்கு மாணவர் வரவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### *14. மதிப்பீடுகள்*

ஒவ்வொரு தவணை முடிவிலும் எழுத்து மற்றும் வாசிப்பு தவணை மதிப்பீடுகள் (Term Assessments) நடாத்தப்படும்.

- முதலாம் தவணை முடிவில் முதலாம் தவணை மதிப்பீடு (Term 1 Assessment) நடாத்தப்படும்.
- இரண்டாம் தவணை முடிவில் அரையாண்டுப் பரீட்சை நடைபெறும். அதில் வாசிப்பு, எழுத்து, வாய்மொழித் தொடர்பாடல் என்பவற்றுடன் பேச்சுப் போட்டிக்கான மதிப்பீடும் (Half-yearly Assessment) நடாத்தப்படும், இம் மதிப்பீட்டின் புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.
- மூன்றாம் தவணை இறுதியில் மூன்றாம் தவணை மதிப்பீடு (Term 3 Assessment) நடாத்தப்படும்.
- நான்காம் தவணை இறுதியில் ஆண்டிறுதிப் பரீட்சை நடைபெறும். அதில் வாசிப்பு, எழுத்து, பேச்சு மற்றும் வாய்மொழித் தொடர்பாடல் என்பவற்றுக்கான மதிப்பீடு (Year-end Assessment) நடாத்தப்படும். இம் மதிப்பீட்டின் புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### *15.* **HSC** *பிரத்தியோக வகுப்பு*

தற்பொழுது மாணவர்களை HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் தற்போது பிரத்தியோக வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம். பெற்றோர்களாகிய நீங்கள் உங்களது பிள்ளைகளை HSCயில் தமிழை ஒரு பாடமாக எடுத்து எமது தேன்மதுர தமிழ் மொழியை இவ்அவுஸ்திரேலியக் கண்டத்தில் பரவும்வகை செய்திட வேண்டி நிற்கின்றோம்.

### *16. இணைய வசதியும்* **IPad** *மற்றும் மடிக்கணினி வசதியுமுடைய வகுப்பறை* **(Internet, iPad and Laptop Class Room)**

எமது பாடசாலையில் உள்ள ஒவ்வொரு வகுப்பறையும் மாணவர்களின் சிறப்பான கற்றல் நடவடிக்கைகளுக்காக தற்போது இணைய வசதியும் தொடுகை உணர் திரை வசதியுமுடையதாகவும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பாவனைக்காக IPad மற்றும் மடிக்கணினியும் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

### 17. பாடசாலையில் மாணவர்களின் ஒழுங்கு முறைகள்

- ❖ வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களை குழப்பாமல் ஆசிரியரின் சொல்லுக்கு கீழ்படிந்து நடப்பதுடன் உங்கள் ஆசிரியர் வகுப்பறைக்குச் சென்றதன் பின்புதான் மாணவர்கள் வகுப்பறைக்கு செல்ல வேண்டும். அத்துடன் வகுப்பு முடிந்ததும் வகுப்பறையை பாடசாலை ஆரம்பிக்க முன்பு இருந்த ஒழுங்கு முறைக்கு ஏற்ப ஆசிரியருடன் சேர்ந்து ஒழுங்குபடுத்திய பின்பு தான் வெளியேற வேண்டும்.
- ❖ வகுப்பறை பொருட்களை சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தாமலும் வகுப்பறையில் உள்ள உடமைகளை சேதப்படுத்தாமலும் இருப்பதுடன் வகுப்பறையில் மாணவர்கள் சக மாணவர்களின் பொருள்களை அனுமதி இல்லாமல் எடுத்தல் அல்லது ஒளித்து விளையாடுதல் போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும்.
- ❖ வகுப்பறையில் மாணவர்கள் தொலைபேசியையோ அல்லது ஏனைய இலத்திரனியல் உபகரணங்களையோ (IPad, Tablet, Nintendo, etc ) பாவிப்பதை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.
- ❖ வகுப்பு இடைவேளையின் போது வழங்கப்படும் குளிர்பானம், தேநீர் மற்றும் சிற்றூண்டிகளை வரிசையில் வந்து பெற்றுக்கொள்வதுடன் அவற்றை வகுப்பறைக்கு கொண்டு செல்வதை தவிர்க்க வேண்டும்.
- ❖ இடைவேளை நிறைவடைந்து வகுப்பறை செல்லுமுன் உங்களிடம் எஞ்சியுள்ள உணவுப்பண்டங்களையும், குளிர்பானம் அருந்திய வெற்றுக் குவளைகளையும் மற்றும் குப்பைகளையும் தவறாமல் குப்பைத் தொட்டியில் போடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 18. மாணவர்கள் தமிழைக் கற்பதில் பெற்றோர்களின் ஈடுபாடு

ஆசிரியர்கள் தமிழைக் கற்பித்தாலும் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளின் பிரதான கல்வியாளர்கள். எனவே பாடசாலையினதும் வீட்டினதும் கூட்டு முயற்சியினாலேயே குழந்தையின் தமிழ் மொழி அறிவு வளரும் என்பதால் தமிழ் மொழி கற்பித்தல் பணியில் ஈடுபட பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அதாவது:
- ➢ தமிழில் குழந்தைகளுடன் முடிந்தவரை பேசுவதுடன் வீட்டுப்பாடம் மற்றும் பிற பாடசாலை நடவடிக்கைகள் மூலம் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல்
- ➢ குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து வகுப்பு ஆசிரியருடன் அல்லது அதிபருடன் கலந்துரையாடுவது
- ➢ பாடசாலை ஏற்பாடு செய்த சிறப்பு விழாக்களில் கலந்துகொள்வதுடன் பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்பதும் பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவது.

### 19. மாணவர்கள் தமிழில் கதைப்பதை ஊக்குவித்தல்

பேசப்படாத மொழி புவியில் வாழ்ந்ததில்லை. மாணவர்கள் மொழியை பயன்படுத்தி கற்க வேண்டும். தமிழில் உரையாட வேண்டும். எனவே பாடசாலை வகுப்பறை தவிர்ந்த ஏனைய இடங்களிலும் சக மாணவர்களுடன் தமிழில் பேசுவதை ஊக்குவிக்க சில பரிசுகளை பாடசாலை நிர்வாகம் வழங்க உத்தேசித்துள்ளது என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### 20. கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த தமிழ்ப் புலமைப் பரீட்சை (Federation Exam)

இந்த வருடமும் எமது பாடசாலை ஆண்டு 3 முதல் ஆண்டு 10/11 வரையான வகுப்பு மாணவர்கள் தமிழ்ப் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சையில் தோற்றியிருந்தார்கள். இப்பரீட்சை பெறுபேறுகள் விரைவில் வெளிவர இருப்பதுடன் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 06ம் திகதி (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை Girraween Public School பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### 21. சரஸ்வதி பூஜை (வாணி விழா)

**நான்காம் தவணை ஆரம்பமாகும் தினமான எதிர்வரும் 15.10.2022 அன்று எமது பாடசாலையில் சரஸ்வதி பூஜை (வாணி விழா) பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.** அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்வதுடன் அன்றைய தினம் உங்களின் பிள்ளைகள் குழுவாக தேவாரம், திருவாசகம் அல்லது சைவ சமயம் சம்பந்தமான பாடல்கள் படிக்கவிரும்பினாலும் அல்லது வேறு ஏதேனும் சங்கீதம் இசைக்க விரும்பினாலும் பெற்றோர்கள் ஆசிரியர்களான திருமதி. பாமரதி மகேஸ்வரமூர்த்தி, செல்வி. சாமினி இரமணன் – கீழ் வகுப்பு, திருமதி. செல்வராஜி இரங்கநாதன், திருமதி. சாந்தினி ஜெயதேவன் – மேல் வகுப்பு அவர்களை அல்லது உங்களது பிள்ளைகளது வகுப்பு ஆசிரியர்களை தொடர்பு கொண்டு தயார்செய்து அழைத்துவரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அன்றைய தினம் வழமைபோல் பெற்றோர்களினால் கொண்டுவரப்பட்ட பிரசாதங்கள் பூஜை முடிந்தபிறகு அனைவருக்கும் வழங்கப்பட்டு சரஸ்வதி பூஜை நிகழ்ச்சி இனிதே நிறைவுபெறும்.

### 22. பாடசாலை விடுமுறை

எமது பாடசாலையின் தவணை மூன்று எதிர்வரும் **24.09.2022** அன்றுடன் முடிவடைந்து தவணை நான்கு வருகின்ற **15.10.2022** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

நன்றி



மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலைய நிர்வாகம்.